**Tamil Nadu Pollution Control Board**

**MINUTES OF PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED ROUGH STONE AND GRAVEL QUARRY COVERING EXTENT OF 1.06.50 HA FOR THIRU.K.RAMARAJ IN S.F.NO. 70/1(P), MYLERIPALAYAM VILLAGE, MADUKKARAI TALUK, COIMBATORE DISTRICT AT M/S. P R S THIRUMANA MANDAPAM, COIMBATORE – POLLACHI MAIN ROAD, EELUR PIRIVU, COIMBATORE DISTRICT ON 29.01.2026 AT 11.00 A.M.**

**Present:**

| | | | |
|---|---|---|---|
| 1. | Tmt. R.Maruthippriya | : | **Revenue Divisional Officer,**<br>Coimbatore South,<br>Coimbatore District. |
| 2. | Dr. C.R. Sathish Kumar | : | **District Environmental Engineer,**<br>Tamil Nadu Pollution Control Board,<br>Coimbatore South. |
| 3. | Thiru. M.Velmurugan | : | **Assistant Engineer,**<br>Tamil Nadu Pollution Control Board,<br>Coimbatore South. |
| 4. | Thiru.S.Sheik Nawas | : | EIA Consultant,<br>Geo Exploration and Mining Solutions,<br>Salem |
| 5. | Public | : | 77 |

*****

The proposed quarry M/s. **Thiru.K.Ramaraj** over an extent of 1.06.50 Ha at S.F.Nos.70/1(P), Myleripalayam Village, Madukkarai Taluk, Coimbatore District has a total area of 1.06.50 hectares. The **Revenue Divisional Officer**, Tahsildar of Madukkarai, the public to attend public hearing and the quarry owners were welcomed by the District Environmental Engineer, TNPCB Coimbatore South. According to the 2006 Environmental Impact Assessment Notification of the Union Ministry of Environment, Forest and Climate Change, GOI it is necessary to obtain prior environmental clearance for 8 types of industries,

and while obtaining such prior environmental clearance, it is a rule to obtain the views of the public and record it and submit the same to the State Environmental Impact Assessment Authority. Accordingly, he informed that the details of this public hearing had already been published in the Tamil and English dailies, Thinamalar and The New Indian Express on 23.12.2025 and the Environmental Impact Assessment Report and Project Summary were placed for public viewing at the necessary offices. Further, the information about this meeting has been announced through Flex boards at two prominent places in the village and handouts have been distributed to the public. The photographs of which are shown here.

He further informed that on behalf of the quarry owners, the project consultant will explain the details of ordinary stone and gravel quarry to the public and after that, the public will be asked to register their views regarding the project. All this audio and video recording of proceedings will be submitted to the Tamil Nadu State Environmental Impact Assessment Authority.

The Revenue Divisional Officer inaugurated the public consultation meeting and said that the purpose of the meeting is to record the environmental comments raised by the public. Later, the project consultant of the ordinary stone and gravel quarry project gave a presentation on the proposed ordinary stone and gravel quarries.

Following this, the Environmental Impact Assessment Consultant of the Rough Stone and Gravel Quarry, Thiru.S.Sheik Nawas, EIA Consultant, Geo Exploration and Mining Solutions, Salem has welcomed everyone and gave a detailed explanation through a video presentation about the proposed ordinary stone and gravel quarry and the environmental management plan to be implemented during its implementation.

Then, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Coimbatore South, said that the public's comments on the rough stone and gravel quarry project, which was currently being explained in detail through a video presentation, can be recorded and also, they will be recorded on the video as well.

Accordingly, the public recorded their following comments and suggestions are below.

1. **Thiru. Senthil Kumar Myleripalayam**:

He greeted everyone. K. Ramaraj's quarry has been operating for a long time. Permission can be given to this quarry. Many people will benefit from it. They are doing good, they can definitely be given permission.

2. **Thiru.Kumar, Myleripalayam:**

He greeted everyone. I would like to inform you that if Ramaraj gets the appropriate recognition, the poor families in the vicinity will be benefitted. I request you to grant them permission. Thank you.

3. **Thiru.Sivakumar, Arasampalayam**:

My name is Sivakumar. I am a driver. The stone quarry next to here makes it very easy to supply to Kinathukadavu and Pollachi areas, so if this stone quarry is given a license, about 100, 150 families of drivers, cleaners will get a livelihood. So I have no objection to granting permission to this quarry. Thank You.

4. **Thiru.Krishnasamy, Myleripalayam**:

If Ramaraj Quarry is given permission, ten people will survive.

5. **Thiru.Sivalingam, Myleripalayam**:

There are about 5000 families here. Permission can be granted to this quarry. Thank You.

6. **Thiru. Karthi, Dindigul**:

My name is Karthi, I am a social activist. This company is doing countless works for the people living in this area. Therefore, I humbly request the Pollution Control Board to grant a no-objection certificate to this quarry.

7. **Thiru.Rangan Thoppampalayam**:

I am Rangan Thoppampalayam, if you give permission, it will be very helpful for us.

8. **Thiru.Suburaman NGO**:

He greeted everyone. My name is B.Suburaman, Brahma Tirupati NGO. I am the central committee president for the four states. We are looking at the opinion polls in all these four states. So far, we came Coimbatore for first time. I have some suggestions for Ramaraj sir, that if there was a quarry in our village, it is a blessing from God, so we should consider the surrounding villages as our village. You should see everything. No one has said anything about the quarry. Therefore, drinking water should be provided in the village, and for the expenses of the temple if there is one, and for the community halls. It would be very good if the people here were given vocational training. It would be good if school children were given books, pens, etc. and sports competitions were held for them and the people in the village were encouraged. Similarly, I request you to give medicines to the nearby farmers and take good care of everyone in the village, and I request that permission may be given to this quarry. Thank You.

9. **Thiru. Sundararajan, Myleripalayam**:

Good afternoon to everyone. My name is M. Sundararajan, I am from Karacheri Village. Ramaraj quarry is located in Maylaleripalayam, Madukkarai Taluk. Since there are quarries around there, there is no objection to giving permission to this quarry. Many people from outside the village and from outside the state are benefiting from giving permission to this quarry. There is no objection to giving permission to this quarry so that the villagers can get a livelihood. As soon as possible I humbly request you to help me get permission by doing whatever you can to get permission. Thank You.

10. **Thirumathi.Jebakani Pollachi**:

I would like to express my gratitude to all the general public who attended this consultation meeting, and also to all the superiors and representatives of the charity organization. I am a Jebakani activist, I have been working in a charity organization for 22 years. I am presenting my opinion here. There is no obstacle in running this stone quarry, it is something that can increase the livelihood of the people, all the educated youth, uneducated youth and women in the area are definitely looking for job opportunities. The company provides assistance to school children. Even if the government takes care of the basic problems, this company will start doing road facilities and other things in between. They will participate in special times. Also, a lot of assistance is provided by this company, which is something that can increase the livelihood of the surrounding villages. Therefore, I respectfully, politely and respectfully request that my comments be given without any hindrance, and I bid you farewell. Thank you, greetings.

**District Environmental Engineer**:

The details of person, who attended the above public hearing the public's views expressed in the meeting, the recorded video proceedings of meeting along with photographs will be submitted to the SEIAA.

At the end of the meeting, the District Environmental Engineer thanked the Revenue Divisional Officer who chaired the public hearing meeting and all the public and all the officials.

**No. of Petition received: 4**

24/2/26

**District Environmental Engineer,**
**Tamil Nadu Pollution Control Board,**
**Coimbatore South.**

24/02/26

**Revenue Divisional Officer,**
**Coimbatore South,**
**Coimbatore District**

# தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

**கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரை வட்டம், மயிலேறிபாளையம் கிராமத்தில் திரு.K.இராம்ராஜ் அவர்களால் க.ச.எண்.70/1(P)–ல் 1.06.50 ஹெக்டேர் பரப்பளவில் அமைய உள்ள சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரிக்கான பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் 29.01.2026 அன்று காலை 11.00 மணியளவில் தி/ள். கோயம்புத்தூர் மாவட்டம், ஏலூர் பிரிவு ரோட்டில் அமைந்துள்ள தி/ள். பி. ஆர். எஸ் திருமண மண்டபத்தில் 29.01.2026 அன்று காலை 11.00 மணியளவில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்ட நடவடிக்கை குறிப்புகள்.**

**பங்கேற்றோர் :**

| | | |
|---|---|---|
| 1 | திருமதி.R.மாருதிப்பிரியா | வருவாய் கோட்டாட்சியர்<br>கோயம்புத்தூர் தெற்கு<br>கோயம்புத்தூர் மாவட்டம் |
| 2. | முனைவர்.C R சதீஷ்குமார் | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>கோயம்புத்தூர் தெற்கு |
| 3. | திரு.மா.வேல்முருகன் | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>கோயம்புத்தூர் தெற்கு |
| 4. | திரு.ஷேக் நவாஸ் | திட்ட வடிவமைப்பாளர்,<br>தி/ள். ஜியோ எக்ஸ்ப்ளோரேஷன் அண்ட் மைனிங் சொல்யூஷன், சேலம் |
| 5. | பொதுமக்கள் எண்ணிக்கை | 77 |

*****

கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரை வட்டம், மயிலேறிபாளையம் கிராமத்தில் திரு.K.இராம்ராஜ் அவர்களால் க.ச.எண்.70/1(P)–ல் 1.06.50 ஹெக்டேர் பரப்பளவில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள திரு.K.இராம்ராஜ் அவர்களின் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டத்தின் மொத்த பரப்பளவு 1.06.50 ஹெக்டர்ஸ் ஆகும். இக்குவாரி திட்டத்திற்கு மத்திய சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்துள்ள வருவாய் கோட்டாட்சியர் அவர்களையும், வட்டாட்சியர் மதுக்கரை அவர்களையும், பொதுமக்களையும் மற்றும் குவாரி உரிமையாளர்களையும், கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் தெற்கு அலுவலக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் வரவேற்றார். மத்திய சுற்றுச்சூழல் வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்தின் 2006 ஆண்டு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையின் படி 8 வகையான தொழிற்சாலைகளுக்கு சுற்றுச்சூழல் முன் அனுமதி பெற வேண்டும் என்பது அவசியம் என்றும், அவ்வாறு சுற்றுச்சூழல் முன் அனுமதி பெறும் போது பொது மக்களின் கருத்துக்களை கேட்டு அதை பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென்பது விதியாகும். அதன்படி இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விவரம் ஏற்கனவே தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளிதழ்களான முறையே தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் மற்றும் தினமலர் ஆகிய நாளிதழ்களில் 23.12.2025 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததையும் மற்றும் தேவையான அலுவலகங்களில் பொது மக்கள் பார்வைக்காக சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை மற்றும் திட்ட சுருக்கம் வைக்கப்பட்டிருந்ததாக தெரிவித்தார். மேலும், இந்த கூட்டம் நடைபெறவுள்ள தகவலை கிராமத்திலுள்ள முக்கியமான இரண்டு இடங்களில் விளம்பர பலகை மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது மற்றும் துண்டு பிரசுரங்கள் மூலம் பொது மக்களிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனுடைய புகைப்படங்கள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் தொடர்பாக குவாரி உரிமையாளர்களின் சார்பாக அவருடைய திட்ட ஆலோசகர் சாதாரணக் கல் மற்றும் கிராவல் குவாரி திட்டத்தை பற்றிய விளக்க உரை பொதுமக்களுக்கு விளக்குவார் எனவும் அதனைத் தொடர்ந்து பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பான கருத்துக்களை பதிவு செய்யுமாறும் இவை அனைத்தும் ஒலி மற்றும் ஒளிப்பதிவு செய்யப்பட்டு இக்கூட்டத்தின் நடவடிக்கைகள் மற்றும் குறிப்புகள் தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என தெரிவித்தார்.

வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தொடங்கி வைத்தார் அவர் பொதுமக்கள் எடுத்துரைக்கும் சுற்றுச்சூழல் சம்பந்தமான கருத்துக்களை பதிவு செய்வது கூட்டத்தின் நோக்கம் என்று கூறினார். பின்னர் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டத்தின் திட்ட ஆலோசகரால் உத்தேசிக்கப்பட்டுள்ள சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரிகள் தொடர்பான விளக்கவுரையை நிகழ்த்தக் கூறினார்.

அதனை தொடர்ந்து சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆலோசகர் திரு.ஷேக் நவாஸ் அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்துள்ள அனைவரையும் வரவேற்று உத்தேசிக்கப்பட்டுள்ள சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்ட செயல்பாடு தொடர்பாகவும் மற்றும் இதன் செயல்பாட்டின் போது மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் காணொளி விளக்க காட்சி மூலம் விரிவாக எடுத்துரைத்தார்.

பின்னர், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கோயம்புத்தூர் தெற்கு அவர்கள் தற்போது காணொளி விளக்கக்காட்சி மூலம் விரிவாக எடுத்துரைக்கப்பட்ட இந்த சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டம் குறித்த பொதுமக்களின் கருத்துக்களை பதிவு செய்யலாம் எனவும் அவை வீடியோவிலும் பதிவு செய்யப்படும் எனவும் கூறினார்.

அதன்படி பொதுமக்கள் தங்களுடைய கீழ்க்கண்ட கருத்துக்களை பதிவு செய்தனர் ஆலோசனைகளை தெரிவித்தனர்.

1. **<u>திரு.செந்தில் குமார் மயிலேரிபாளையம்</u>** :

வணக்கம், செந்தில் குமார் மயிலேறிபாளையம், கே. ராமராஜ் அவர்களது குவாரி வெகு காலமாக இயங்கி கொண்டிருக்கிறது. அவர்களுக்கு கண்டிப்பாக அனுமதி கொடுக்கலாம். அதனால் நிறைய பேர் பயனடைவார்கள். நல்லது செய்கிறார்கள், கண்டிப்பாக கொடுக்கலாம்.

2. **<u>திரு.குமார் மயிலேரிபாளையம்</u>**:

எல்லோருக்கும் வணக்கம். ராமராஜ் அவர்களுக்கு உரிய அங்கீகாரம் பெற்றால் அந்த சுற்றுவட்டாரத்தில் இருக்கக்கூடிய ஏழை குடும்பங்கள் பயன் பெறும் என்று உங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். தயவு செய்து அவர்களுக்கு நீங்கள் அனுமதி வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

3. **திரு.சிவக்குமார் அரசம்பாளையம்** :

என் பெயர் சிவகுமார். லாரிக்காரர். இங்கு பக்கத்தில் இருக்கிற கல் குவாரியினால் கிணத்துக்கடவு, பொள்ளாச்சி பகுதிக்கெல்லாம் விநியோகம் செய்ய மிகவும் எளிதாக இருக்கிறது, அதனால் இந்த கல் குவாரிக்கு லைசென்ஸ் கொடுத்தால் லாரிக்காரர்கள், டிரைவர்கள், கிளீனர்கள் கிட்டதட்ட ஒரு 100, 150 குடும்பங்கள் வாழ்வாதாரம் பெறும். அதனால் அனுமதி கொடுப்பதில் எனக்கு எந்தா ஆட்சேபனையும் கிடையாது. எங்கள் வாழ்வாதாரம் மேம்படும்.

4. **திரு.கிருஷ்ணசாமி மயிலேறிபாளையம்**:

வணக்கம், மயிலேறிபாளையம் ராமராஜ் குவாரிக்கு அனுமதி கொடுத்தால் பத்து பேர் பிழைப்பார்கள்.

5. **திரு.சிவலிங்கம் மயிலேறிபாளையம்** :

இங்கு ஒரு 5000 குடும்பங்கள் இருக்கிறது. தாராளமாக அனுமதி கொடுக்கலாம். நன்றி.

6. **திரு.கார்த்தி, திண்டுக்கல்** :

என் பெயர் கார்த்தி, நான் ஒரு சமூக ஆர்வலர். இந்த நிறுவனம் இந்த பகுதியில் வாழ்கின்ற மக்களுக்கு எண்ணற்ற பணிகளை செய்து வருகிறது. எனவே இந்நிறுவனத்திற்கு தடையில்லா சான்று வழங்குமாறு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

7. **திரு.ரங்கன், தோப்பம்பாளையம்**:

நான் ரங்கன் தோப்பம்பாளையம் ராமராஜ் குவாரிக்கு அனுமதி கொடுத்தால் எங்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும்.

8. **திரு.சுப்புராமன், NGO**:

எல்லோருக்கும் வணக்கம். என் பெயர் B.சுப்புராமன் திருப்பதி NGO. நான் நான்கு மாநிலங்களுக்கான மத்திய குழு தலைவர். நாங்கள் இந்த 4 மாநிலங்களிலும் கருத்துக்

கேட்பு கூட்டத்தில் பார்க்கிறோம் இப்போதுவரை கோயம்புத்தூரில் நடந்தது இது ஒன்றுதான் பார்த்து இருக்கிறோம். ராமாராஜ் சாருக்கு ஒரு 4 வார்த்தை சொல்கிறேன் என்னவென்றால் நமது கிராமத்தில் குவாரி இருந்தது என்றால் நமக்கு அது கடவுள் தந்த ஒரு வரம், அதனாலே சுற்றி உள்ள கிராமங்களைக் கூட உங்கள்கிராமமாக நினைக்க வேண்டும். எல்லாவற்றையும் நீங்கள்தான் பார்க்க வேண்டும். குவாரியை பற்றி யாரும் எதுவும் சொல்லவில்லை. அதனால் கிராமத்திலுள்ள குடிதண்ணீருக்கு, மற்றும் கோவில் இருந்தால் அதன் செலவுகளுக்கு, மற்றும் சமூக கூடங்களுக்கு குடி நீர் தரவேண்டும் . இங்குள்ள மக்களுக்கு தொழில் பயிற்சி கொடுத்தால் மிகவும் நன்றாக இருக்கும். பள்ளி குழந்தைகளுக்கு புத்தகம், பேனா போன்றவற்றை கொடுத்து, மேலும் அவர்களுக்கு விளையாட்டு போட்டிகள் வைத்து கிராமத்தில் உள்ளவர்கள் உற்சாகப்படுத்தினால் நன்றாக இருக்கும். அது போல அருகிலுள்ள விவசாய மக்களுக்கு மருந்துகள் கொடுத்து எல்லோரையும் நன்றாக பார்த்து கிராமத்தில் எல்லோரையும் நன்றாக பார்த்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, ராமராஜ் அவர்களுக்கு அனுமதி தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டு விடைபெறுகிறேன். நன்றி.

9. **திரு.சுந்தரராஜன், காராச்சேரி** :

அனைவருக்கும் இனிய மதிய வணக்கம். என் பெயர் M.சுந்தரராஜன், நான் காரச்சேரி கிராமம். ராமராஜ் அண்ணன் குவாரி மயிலலேரிபாளையம், மதுக்கரை தாலுகாவில் அமைந்துள்ளது. அங்கு சுற்றிலும் குவாரிகள் இருப்பதினால் இவர் குவாரிக்கு அனுமதி கொடுப்பதற்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. இந்த குவாரிக்கு அனுமதி கொடுப்பதினால் வெளியூர் மக்கள், வெளி மாநில மக்கள் நிறைய பேர் பயன் பெறுகிறார்கள். மக்களுக்கு வாழ்வாதாரம் கிடைப்பதற்கு இந்த குவாரிக்கு அனுமதி கொடுப்பதற்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. கூடிய விரைவில் அனுமதி கிடைக்க என்ன உதவிகள் செய்ய முடியுமோ அதை செய்து அனுமதி கிடைக்க உதவும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

10. **திருமதி.ஜெபகனி பொள்ளாச்சி :**

இந்த கருத்துக் கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்த அனைத்து பொது மக்களுக்கும் வணக்கத்தை தெரியப்படுத்திக் கொண்டு மேலும் மேலதிகாரிகள் அனைவருக்கும் வணக்கத்தை தெரியப்படுத்திக் கொண்டு, தொண்டு நிறுவன பிரதிநிதிகள் அனைவருக்கும் வணக்கத்தை தெரியப்படுத்திக் கொண்டு, நான் ஜெபகனி ஆர்வலர் , நான் ஒரு தொண்டு நிறுவனத்தில் 22 ஆண்டுகளாக பணி புரிந்து கொண்டு வருகிறேன். என்னுடைய கருத்தை

நான் இங்கு முன் வைக்கிறேன். இந்த கல் குவாரி நடத்துவதால் எந்த ஒரு தடையும் கிடையாது, மக்களுக்கு வாழ்வாதாரத்தை உயர்த்தக் கூடிய ஒரு விஷயம், சுற்றி உள்ள படித்த இளைஞர்கள், படிக்காத இளைஞர்கள், பெண்கள் அனைவருமே கண்டிப்பாக வேலை வாய்ப்பை தேடிக் கொள்ளுகிறார்கள். பள்ளி குழந்தைகளுக்கு அந்த நிறுவனம் உதவிகள் அளிக்கிறது. விஷேஷ காலங்களில் அவர்கள் கலந்து கொள்கிறார்கள். மேலும் இந்த நிறுவனத்தால் நிறைய உதவிகள், சுற்றி உள்ள கிராமங்களுக்கு அதிகமாக வாழ்வாதாரத்தை உயர்த்தக் கூடிய ஒரு விஷயமாக இருக்கிறது. அதனால் என்னுடைய கருத்து அனுமதி தடையில்லாமல் அளிக்கும்படி அன்போடும், பண்போடும், பாசத்தோடு கேட்டுக் கொண்டு விடை பெறுகிறேன், நன்றி, வணக்கம்.

<u>மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்</u>:

இங்கு கருத்துக்களை பதிவு செய்த அனைத்து பொதுமக்களுக்கும் எங்களது நன்றி. மேற்கூறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொளி குறுந்தகடு, ஒலி மற்றும் புகைப்படங்கள் அடங்கிய பதிவுகோல் ஆகியவை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆணையத்திற்கு இத்துடன் இணைத்து அனுப்பப்படும்.

கூட்ட முடிவில் மாவட்ட சுற்றுசூழல் பொறியாளர் அவர்கள் இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தலைமை ஏற்று நடத்தி கொடுத்த மாவட்ட வருவாய் கோட்டாட்சியர் மற்றும் தங்களுடைய கருத்துக்களை பதிவு செய்த பொது மக்கள் அனைவருக்கும் மற்றும் அதிகாரிகள் அனைவருக்கும் நன்றியினை தெரிவித்துக் கொண்டு இந்த கூட்டத்தை இனிதே முடிக்கப்படுகிறது. நன்றி வணக்கம். எனஅனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

**மனுக்களின் எண்ணிக்கை : 4**

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,**
**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,**
**கோயம்புத்தூர் தெற்கு.**

**வருவாய் கோட்டாட்சியர்,**
**கோயம்புத்தூர் தெற்கு,**
**கோயம்புத்தூர் மாவட்டம்.**